WORLD SAIVA COUNCIL (AUSTRALIA) INC.
உலக சைவப் பேரவை (அவுஸ்திரேலியா)
Postal Address: 6, Dudley Street, Auburn, NSW 2144
Tel: 0408 432 680 email: sabanathank@gmail.com

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-35

ஆசிரியர்: சைவப்புலவர் முரு.சேமகரன்

(கவிஞர் கல்லோடைக் கரன்)

22-07-2026

தமிழ் மொழி/யாப்பு
இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 1 'பதம்', 22-07-2026

பல மாணவர்களின் வேண்டுகோளுக்கு அமைய இவ்வகுப்பு இடம் பெறுகிறது.

பதம் என்பது சொல், கிளவி, என்பதை ஒத்த சொல்லாகும். பதம் பகுபதம், பகாப்பதம் போன்ற சொல்களைத் தொல்காப்பியர் மிக சொற்பமே பயன்படுத்தி உள்ளார். ஆயினும் சொல் பற்றிய விளக்கங்களை அவர் சொல்லதிகாரத்தில் விளக்கினார் என்பதை நாங்கள் முன்பே கற்றுள்ளோம். ஆகத் தொல்காப்பியரும், பவணந்தியாரும் பதங்கள் பற்றி உரைத்தவற்றை இப்போது பொதுவாகக் காண்போம்.

தமிழ் மொழி/யாப்பு
இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 1 'பதம்', 22-07-2026

3

பகுபதம் :

ஒரு சொல்லை அதாவது பதத்தை பகுதி விகுதி ஆகிய உறுப்புகளாகப் பகுக்க முடியுமாயின், அது 'பகுபதம்' எனப்படும்.

ஒரு மொழியில் இருப்பது 'சொல்', அச் சொல்லின் கூறு 'அலகு' எனப் பெயர் பெறும்.

தமிழ் மொழி/யாப்பு

இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 1 'பதம்', 22-07-2026

எ-டு:

அறிஞன், பாடினான், ஆடினாள், உதித்தான், என்பன பகுபதங்களிற் சிலவாம்.

அறிஞன் = அறி + ஞ் + அன்

பாடினான் = பாடு + இன் + ஆள்

ஆடினாள் = ஆடு+இன் + ஆள்

உதித்தான் = உதி + த் + த் + ஆன்

இவ்வாறு பகுத்த பின்னர் பொருள் தருவது பகுபதமாகும்.

தமிழ் மொழி/யாப்பு
இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 1 'பதம்', 22-07-2026

4

பகாப்பதம் :

ஒரு பதத்தினைப் பகுதி, விகுதி முதலிய உறுப்புகளாகப் பகுக்க முடியவில்லை என்றால், அது 'பகாப்பதம்' ஆகும்.

எ-டு:

மரம், கடல், தலை, பூ, தேன், பால், மழை எனப் பலவாம். ஆகப் பிரித்தால் பிரிக்க முடியாதது அல்லது பொருள் தராதது பகாப்பதம், பொருள் தருவது பகுபதம் எனவறிக.

தமிழ் மொழி/யாப்பு
இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 1 'பதம்', 22-07-2026

5

ஒரு பகுபதத்தைப் பகுக்கும் போது, அது 6 உறுப்புகளாகப் பிரியும். அவை 'பகுபத உறுப்புகள்' எனப் பெயர் பெறும். அவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம் :

1. பகுதி - ஒரு பதத்தின் முதலில் நிற்கும் சொல். இதனைப் பகுக்க இயலாது, ஆதலால் இது பகாப்பதம் எனப்படும்.

"தத்தம் பகாப்பதங்களே பகுதி யாகும்" (நன்னூல் 134)

தொல்காப்பியர் பகுதியை 'அடிச்சொல்/ வேர்ச்சொல்' எனக் குறித்தார். சில இடங்களில் 'முதனிலை' எனவும் குறிக்கப்பட்டது.

தமிழ் மொழி/யாப்பு

இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 1 'பதம்', 22-07-2026

எ-டு:

கண்ணன் - பகுதி கண்.

நாடன் - இதன் பகுதி நாடு.

இவை 'பெயர்ப் பகுபதம்' ஆகும். இங்கு பகுதி பெயரை உணர்த்தியது.

படிப்பான் - படி பகுதி.

கொன்றான் - கொல் பகுதி.

தந்தான் - தா பகுதி.

இவை 'வினைப் பகுபதம்'

பகுதி வினையை உணர்த்தியது.

2

விகுதி :

ஒரு பகுபதத்தின் இறுதியில் நிற்கும் உறுப்பு 'விகுதி' எனப்படும்.

விகுதியை 'இறுதிநிலை' என்று தொல்காப்பியம் குறிக்கிறது.

வினைமுற்றுப் பகுபதத்தின் விகுதியானது திணை, பால், எண், இடம், எச்சம், முற்று, வியங்கோள் ஆகியவற்றை உணர்த்தும்.

தமிழ் மொழி/யாப்பு
இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 1 'பதம்', 22-07-2026

"அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம் மார்
அ ஆ கு டு து று என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓமொடு உம் ஊர்
கடதற ஞ ஆய் இம் மின் இர் ஈர்
ஈயர் கயவும் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சிலவே"

(நன்னூல் 140)

தமிழ் மொழி/யாப்பு

இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 1 'பதம்', 22-07-2026

இடைநிலை :

ஒரு பகுபதத்தில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்கும் உறுப்பு 'இடைநிலை' ஆம். இது பெயர் இடைநிலை, வினை இடைநிலை என இருவகைப்படும்.

எ-டு:

தலைவர் - தலை + வ் + அர் (வ் காலங்காட்டா இடை நிலை)

தலைவி - தலை + வ் + இ

இவ்விரண்டும் பெயர்இடைநிலை.

தமிழ் மொழி/யாப்பு
இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 1 'பதம்', 22-07-2026

வினை இடை நிலை - இது மூன்று காலமும் காட்டும். அவை:

நிகழ்கால இடைநிலை
இறந்தகால இடைநிலை
எதிர்கால இடைநிலை.

"ஆநின்று கின்று கிறு மூவிடத்தின்
ஐம்பால் நிகழ் பொழுதறை வினை இடை
நிலை" (நன்னூல் 143.)

இவை நிகழ்கால இடை நிலைகள்.

தமிழ் மொழி/யாப்பு
இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 1 'பதம்', 22-07-2026

எ-டு:

ஓடுகிறான் - ஓடு + கிறு + ஆன்

பேசுகின்றான் - பேசு + கின்று + ஆன்

பேசாநின்றாள் - பேசு + ஆநின்று + ஆள்

இறந்தகால இடைநிலைகள் :

"தடறவொற் றின்னே ஐம்பால் மூவிடத்து
இறந்த காலம் தருந்தொழில் இடைநிலை" (142)

தமிழ் மொழி/யாப்பு
இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 1 'பதம்', 22-07-2026

எ-டு:

செய்தான் - செய் + த் + ஆன்

உண்டான் - உண் + ட் + ஆன்

தின்றான் - தின் + ற் + ஆன்

உறங்கினான் - உறங்கு + இன் + ஆன்

எதிர்கால இடைநிலைகள்:

"பவ்வ மூவிடத்து ஐம்பால்
எதிர்பொழுது இசைவினை இடைநிலை
ஆமிவை சில இல" (144)

தமிழ் மொழி/யாப்பு
இலக்கணத் தனிப் பொருள் வகுப்பு - 1 'பதம்', 22-07-2026

எ-டு:

காண்பான் - காண் + ப் + ஆன்
கூறுவாள் - கூறு + வ் + ஆள்

- **இவ் வகுப்பு நிறைவு -**

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு - 35, 22-07-2026

தொல் : சொல்: இயல் - 9, எச்சவியல்

ஐயம் தெளிதல்